இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 269 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 28 – திங்கள்கிழமை 11 மே 2026 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 269 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 28 - Monday 11 May 2026 - Chennai 8 Pages ₹ 5.00

## வரம்புக்குட்பட்டே தமிழ்நாட்டின் கடன் அளவு உள்ளது!

# விரும்பி வாக்களித்த மக்களை திசைதிருப்பாதீர்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முதல்வருக்கு பதில்!

**சென்னை, மே 11 -**

**"வரம்புக்குட்பட்டே தமிழ்நாட்டின் கடன் அளவு உள்ளதால் விரும்பி வாக்களித்த மக்களை ஏமாற்றி திசை திருப்பாதீர்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக முதலமைச்சருக்கு பதிலளித்து தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்க்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



### ஆட்சித் திறமையும்தான் வேணும்!

பதவியேற்றதும் தாங்கள் கையெழுத்திட்டுள்ள அறிவிப்புகளையும் வரவேற்கிறேன். எடுத்த எடுப்பிலேயே அரசிடம் பணம் இல்லை எனப் பேச ஆரம்பிக்காதீங்க. அதெல்லாம் இருக்கு. மக்களுக்குக் கொடுக்க மனசும், ஆட்சித் திறமையும்தான் வேணும்.

ஐந்து ஆண்டுகளாக, கோவிட், வெள்ளம் போன்ற பல பிரச்சினைகளையும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஓரவஞ்சனையையும் சமாளிச்சுதான் நாங்க எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றினோம்.

### தமிழ்நாட்டின் கடன் அளவு!

'ரூபாய் 10 லட்சம் கோடி கடனை வைத்துவிட்டு, கஜானாவைத் துடைத்து விட்டுச் சென்றுள்ளது கடந்த அரசு' என்ற குற்றச்சாட்டை முதல் உரையிலேயே சொல்லி இருக்கீங்களே... அனுமதிக்கப்பட்ட வரம்புக்குட்பட்டே தமிழ்நாட்டின் கடன் அளவு இருக்கிறது.

தமிழ்நாடு அரசின் நிதிநிலை பற்றி கடந்த பிப்ரவரி மாத பட்ஜெட்லயே தெளிவா நாங்க சொல்லிட்டோம். அது உங்களுக்குத் தெரியாதா? அதுக்குப் பிறகுதான் நீங்க பல வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்தீங்க? உங்களுக்கு வாக்களித்த மக்களை மீண்டும் ஏமாற்றி திசை திருப்பாதீங்க!

### நிச்சயம் கற்றுக் கொள்வீர்கள்!

"நடைமுறைக்கு சாத்தியமானதை மட்டுமே வாக்குறுதிகளாக அளிக்கிறேன்" எனக் கூறி ஆட்சிக்கு வந்துள்ள நீங்கள் இப்போதுதான் அரசு நிர்வாகத்துக்குள் அடியெடுத்து வைக்கிறீர்கள். கூடிய விரைவில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றலாம் எனும் நுணுக்கங்களையும் எங்களைப் போலவே நீங்களும் நிச்சயம் கற்றுக் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். வாக்களித்த மக்களோடு, நானும் அதையே எதிர்பார்க்கிறேன்.

### வாழ்த்துகள்!

தங்களின் ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணம் தொடர மீண்டும் எனது வாழ்த்துகள்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

## தமிழ்நாடு சட்டப்பேரவை இன்று கூடுகிறது!

### புதிய உறுப்பினர்கள் பொறுப்பேற்கின்றனர்!

*சென்னை, மே 11 -*

*தமிழ்நாடு சட்டப் பேரவை இன்று (11.05.2026) காலை 9.30 மணிக்கு கூடுகிறது. தற்காலிக சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ள சோழவந்தான் எம்.எல்.ஏ. கருப்பையா முன்னிலையில் புதிதாக தேர்வாகியுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்க உள்ளனர்.*

*புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் இன்று பதவிப்பிரமாணம் செய்து கொள்கின்றனர்.*

*தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், வரும் மே 13 ஆம் தேதிக்குள் சட்டப்பேரவையில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். உறுப்பினர்கள் பதவியேற்ற பிறகு, புதிய சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

## ஈரான் எண்ணெய் கப்பல்கள் மீது அமெரிக்க படைகள் துப்பாக்கிச்சூடு!

வாஷிங்டன், மே 11–

ஓமன் வளைகுடாவில் அமெரிக்காவின் தடையை மீற முயன்ற ஈரானிய எண்ணெய் கப்பல்கள் மீது அமெரிக்க படைகள் தாக்குதல் நடத்தின.

ஈரான் அமெரிக்கா இடையே கடந்த மாதம் 8ஆம் தேதி முதல் தற்காலிக போர் நிறுத்தம் அமலில் உள்ளது. இந்த நிலையில் ஓமன் வளைகுடாவில் கடல்வழித் தடையை மீறி ஈரானியத் துறைமுகத்திற்குள் நுழைய முயன்ற இரண்டு ஈரானிய எண்ணெய் டாங்கர்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதில் கப்பலுக்கு லேசான சேதம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா விதித்த தடைகளை மீறி ஈரான் துறைமுகத்தை நோக்கி அந்த கப்பல்கள் சென்றதாகவும், அப்போது கப்பல் மீது அமெரிக்க போர் விமானம் துப்பாக்கிசூடு நடத்தியதாகவும், அமெரிக்க ராணுவத்தின் மத்திய கட்டளை அமைப்பு தெரிவித்துள்ளது. ஈரான் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டால் மட்டுமே எண்ணெய் ஏற்றுமதி மீண்டும் தொடங்கும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

இதனிடையே, அமெரிக்க நடவடிக்கைக்கு பதிலடியாக ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்க போர் கப்பல்கள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் வளைகுடா பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரித்துள்ளது. இதனிடையே, ஈரான் புரட்சிகர காவல் படையினருடன் தொடர்பு வைத்திருந்த 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பஹ்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

# என்னையே நோக்கி, யான் இந் நெடும்பகை தேடிக் கொண்டேன்....

ப.திருமாவேலன்

இராமாயணத்தில் இராவணன் சொன்னதாக கவி கம்பன் வர்ணிக்கும் வரிகள் இன்றைய சூழலுக்கு பொருத்தமானவை...

**முன்னையோர், இறந்தார் எல்லாம், இப் பகை முடிப்பர் என்றும்,**
**பின்னையோர், நின்றோர் எல்லாம், வென்றனர் பெயர்வர் என்றும்,**
**உன்னை, 'நீ அவரை வென்று தருதி' என்று உணர்ந்தும், அன்றால்;**
**என்னையே நோக்கி, யான் இந் நெடும்பகை தேடிக் கொண்டேன்...**

- என்பான் இராவணன். இந்திரஜித்தைப் பார்த்து இராவணன் சொல்வதாக இப்பாட்டு வருகிறது.

**"களத்தில் போரிட்டு ஏற்கனவே இறந்து போனவர்கள் இந்தப் பகையை முடிப்பார்கள் என்று நினைத்தோ, இப்போது உயிருடன் இருக்கும் வீரர்கள் எதிரிகளை வென்று திரும்புவார்கள் என்று நினைத்தோ, நீ எதிரிகளை வீழ்த்துவாய் என்று நினைத்தோ நான் இல்லை. என்னை நம்பியே நான் இப்போரில் இறங்கினேன்"** என்பதுதான் இந்த வரியின் பொருள்.

**"என்னை நம்பியே இப்போரில் இறங்கினேன்" என்ற சொல்லுக்கு இலக்கணமாக நம் முன்னே ஒரு முகம் தெரிகிறது. அதுதான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முகம்.**



தேர்தலுக்கு முன் அவரோடு இருந்தவர்கள், தேர்தலுக்குப் பிறகு எதைச் சொல்லி என்ன முடிவு எடுத்தாலும் அவர் முகம் மாறவில்லை. அதே சிரித்த முகத்தோடு தான் இருக்கிறார். ஏனென்றால், அவர் தன்னை நம்பியே இப்போரில் இறங்கினார்.

தானே அலைந்தார். நேர காலம் பார்க்காமல் அலைந்தார். எத்தனை ஊர்கள்? எத்தனை பொதுக்கூட்டங்கள். நடைபயணப் பரப்புரையை விடாமல் நடத்தினார். காலையில் நடந்தார். கடும்பகல் நடந்தார். மாலையில் நடந்தார். இரவிலும் நடந்தார். தன் கால்களால் களத்தைச் சீர் செய்தார். நேர் செய்தார். போர் செய்தார். தன்னை நம்பியே போர் செய்தார். இந்த யுத்தம் இழப்பை தந்திருக்கலாம். களம் காணாமல் போய்விடவில்லை என்பதை உணர்ந்த தலைவர் அவர்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட தினமே அறிவாலயம் வந்தார். காலையும் மாலையும் அறிவாலயம் வந்தார். வருத்தமான முகத்துடன் வந்தவர்களையும் சிரித்த முகத்தோடு வரவேற்றார் தலைவர். இந்தப் பக்குவம் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம். அறிவாலயம், நிலத்தில் நிற்கவில்லை. இந்த பலத்தில்தான் நிற்கிறது.

தி.மு.க. இதுவரை தோல்வி அடைந்தது இல்லையா? தோற்றுள்ளது. ஆனால் இந்த தோல்வி அதிக கவலை அளிப்பதாக இருப்பதற்கு என்ன காரணம்? மதிப்பீடுகளுக்கு மரியாதை தரத் தெரியாதவர்களாக மக்களில் சிலர் வளர்கிறார்களே என்பதால்தான்.

"தோல்வி அடைந்த ஒரு சமூகம் எப்படியிருக்கும்?" என்று கேட்டபோது, புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் ஆண்டன் செக்கோவ் இப்படி விளக்கினார்: **"எந்த சமூகத்தில் அற்பமானவை பெரும் தலைப்புகளாக மாற்றப்படுகிறதோ, நல்லுணர்வு சிந்தனைகள் அனைத்தும் மிகைப்படுத்தப்பட்டவையாகத் தள்ளி வைக்கப்படுகின்றனவோ, எந்தச் சமூகத்தில் அதன் களத்தை அற்பர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்களோ அதுவே தோல்வியடைந்த சமூகமாகும்"** என்று சொன்னார் அவர். நாம் இதனை காலத்தின் தோல்வியாக நினைப்பதால்தான் கலங்க வேண்டி உள்ளது.

இப்படியும் ஒரு காலம் முன்பு இருந்தது. அதனை மாற்றித் தான் திராவிடப் பேரியக்கம் எழுந்தது. அதையே மீண்டும் செய்தாக வேண்டும்.

**கொளத்தூரில் தலைவர் வெற்றி பெற முடியாமல் போனதுதான் ஆட்சிக்கு வராமல் போனதை விட அதிக வேதனையைத் தருகிறது. மறுநாள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொளத்தூருக்கு போனபோது மக்கள் கடலில் அல்ல, கண்ணீர் கடலில்தான் நீந்தினார். ஒருவர் தோல்விக்கு, ஒரு நாடு அழுததை இப்போதுதான் பார்க்கிறோம். சமூக ஊடகங்களில் அழுதபடியே பலரும் கதறினார்கள். கண்ணீர் அபிஷேகம் தான் தலைவருக்கு கிடைத்த போற்றுதல்கள் ஆகும்.**

காஞ்சியில் பேரறிஞர் அண்ணாவே தோற்றார். **"புனித ஜெருசலத்துக்காக ஐரோப்பிய நாடுகள் போரிட்டன. ஐரோப்பிய படைக்குத் தலைமை வகித்த 'ரிச்சர்ட் மன்னன் உள்ளே வரக்கூடாது, மற்றவர்கள் வரலாம்' என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. 'நான் உள்ளே போகாவிட்டால் என்ன? என் படைகள் உள்ளே போகிறது' என்றான் மன்னன். அது போல என்னை சட்டசபைக்குள் நுழைய விடவில்லை. அதனால் என்ன என் தம்பிமார்கள் சட்டசபைக்குள் செல்கின்றனர். அவர்கள் உருவில் நான் செல்கிறேன்"** என்று எழுதினார்.

**இப்போதும் உடன்பிறப்புகள் உருவில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான் உள்ளே செல்கிறார்! அவர்கள் யாரை நம்பி உள்ளே செல்கிறார்கள்? தன் தலைவரை நம்பியே பேரவைக்குள் செல்கிறார்கள்! பேரவைகள் எப்போதும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு போர் அவைகளே!**